செய்தி வெளியீடு எண்.687 நாள்.19.8.2008

**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், சென்னை 600 084.**

**செய்திக்குறிப்பு**

தெற்காசியாவில் நடைபெறும் முக்கிய போட்டியான **சென்னை ஓபன் டென்னிஸ்** விளையாட்டுப் போட்டிகள் சென்னையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் இயங்கி வரும் சர்வதேச அளவிலான டென்னிஸ் விளையாட்டு அரங்கில் பதினொறு வருடமாக தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. 2005ம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு நன்கொடையாளர்களின் குழு (Consortium of Sponsors) ஒன்று அமைத்து அதன் மூலம் இப்போட்டியினை தொடர்ந்து ஐந்து வருடத்திற்கு நடத்த முடிவு எடுத்தது. தமிழக அரசு சார்பாக அரசு மான்யமாக ரூ.1.00 கோடியை தொடர்ந்து 2005ம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் வழங்கி, இந்த விளையாட்டுப் போட்டிக்கு **சென்னை ஓப்பன் டென்னிஸ் சேம்பியன்சிப்** என பெயர் சூட்டப்பட்டு இப்போட்டிகள் நடத்தப்பட்டு வருகிறது.

இந்த பிரசித்தி பெற்ற போட்டியில் உலக அளவில் தலை சிறந்த டென்னிஸ் விளையாட்டு வீரர்களான பெக்கர், மோயா, ராப்டர், ஸ்ரீசாப்பன் மற்றும் தற்போதைய உலக மற்றும் ஒலிம்பிக் சாம்பியன் ரபேல் நடால் போன்றவர்கள் கலந்து கொண்டு விளையாடி வருகிறார்கள். சென்னையில் அமைந்துள்ள உலகத்தரம் வாய்ந்த தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய டென்னிஸ் விளையாட்டு அரங்கம் தெற்காசியாவின் மிகச்சிறந்த விளையாட்டு அரங்கம் என்று கருதப்பட்டுகிறது. உலக அளவில் தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்பப்பட்டு அனைவராலும் கண்டுகளிக்கப்பட்டு வரும். இப்போட்டிகள் ஆண்டு தோறும் சுமார் ரூ.10.00 கோடி செலவில் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. இப்போட்டியினை ஐ.எம்.சி., (International Merchandising Corporation) அகில இந்திய டென்னிஸ் கழகம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் தமிழ்நாடு டென்னிஸ் கழகமும் இணைந்து நடத்தி வருகிறது. இந்த சென்னை ஓப்பன் டென்னிஸ் போட்டிகளை சிறந்த முறையில் நடத்தியமைக்கான விருதுகளை தமிழ்நாடு டென்னிஸ் கழகம் பெற்றுள்ளது.

இந்த வருட சென்னை ஒப்பன் டென்னிஸ் விளையாட்டுப் போட்டிகள் (சென்னை ஓப்பன் 2009) சென்னை நுங்கம்பாக்கத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய டென்னிஸ் விளையாட்டு அரங்கில் வரும் **05.01.2009 முதல் 11.01.2009 வரை** நடைபெறவுள்ளது. 2009ம் ஆண்டு நடத்தப்படவுள்ள டென்னிஸ் விளையாட்டு போட்டிகளுக்கு அரசு மான்யமாக ரூ.1 கோடியை வழங்கிட அரசாணை வெளியிட்டுள்ளது. மேலும் ரூ. 2.5 கோடி வட்டியில்லா கடனாக அரசால் சென்னை ஒப்பன் முன்னேற்பாடு செலவுகளை மேற்கொள்ள வழங்கப்படுகிறது.

மேற்கண்ட அரசு மான்யம் ரூ.1 கோடிக்கான காசோலையினை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு.ம.ரா.மோகன், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு சுற்றுச் சூழல் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு.டி.பி.எம்.மைதீன்கான் அவர்களால் 19.08.2008 அன்று தமிழ்நாடு டென்னிஸ் கழகத்திடம் வழங்கப்பட்டது.

மேற்கண்ட இச்செய்தியினை தங்களின் மேலான பத்திரிக்கையில் இலவசமாக பிரசுரம் செய்திட கனிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

உறுப்பினர் செயலருக்காக.

***********

**வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**